[18th July 1962

வெளியேற்றப்பட்ட விவசாயிகள்

* 388 கேள்வி.—திரு. முனு ஆதி (திரு. கோ. சி. மணி சார்பாக) : கனம் பொதுப்பணித் துறை அமச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் உள்குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்து வந்தவர்களுக்கு, சட்டப்படிக்குள்ள உரிமைகளும், பாது காப்பும் இல்லை என்று 1958-ல் இருந்து 1962 வரை, நிலத்தி லிருந்து வெளியேற்றப்பட்ட விவசாயிகள் எத்தனை பேர் ?

THE HON. SRI V. RAMAIAH : The number of sub-tenants evicted in Thanjavur district during the years 1958 to 1961 is 3,740. Figures for 1962 are not available.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், முன்பு உள்குத்தகைக்கு இந்த நிலத்திலே இருந்தவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடை யாது. ஆகவே, இந்த வருஷமாவது இந்த நிலங்களிலே சாகு படி செய்கிறவர்களுக்கு ஒரு ஒப்படைப்புச் சீட்டு கொடுப்பதற் கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா ?

கனம் திரு. வி. ராமையா : இப்போது இருக்கக்கூடிய நிலைபடி பாதுகாப்பு கிடையாது. நாம் இதிலே இடைஞ்சலே இருக்கக் கூடாது என்று ஒரு முடிவு செய்து, அதை நமது நோக்கமாகவும் ஏற்றுக்கொண்டு இந்த ஒரு சூழ்நிலையை தீவிரமாகப் பரிசிலனை செய்து, அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது அவசியமா, அவசியம் இல்லையா என்பதைப்பற்றி தீர்க்கமாக ஆலோசித்து ஒரு முடிவு எடுக்கவேண்டுமென்றும் சமீபத்திலே அதற்காக ஒரு காம்பிர ஹென்சிவ் ஆக்டை தயாரித்து, நன்கு ஆலோசனை செய்யவேண்டு மென்றும் அரசாங்கம் நினைத்திருக்கின்றது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : மந்திரி அவர்கள் சொன்ன படி 'காம்ப்ரெஹென்ஸிவ் ஆக்ட்' சமீபத்தில் வருமா ? அல்லது இன்னும் பல வருஷங்கள் ஆகுமா ? இப்பொழுது இருக்கிற சட்டத்தில் பல சிக்கல்கள் இருப்பதினால், இந்த 'காம்ப்ரெஹென் ஸிவ் ஆக்டை' சீக்கிரம் கொண்டுவருவது பற்றி சர்க்கார் யோசிக் குமா ?

கனம் திரு. வி. ராமையா : எல்லா விவரங்களையும் சேகரம் செய்து நல்ல முடிவுகள் எடுத்தவுடனே சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீவிர முயற்சி எடுக்கும்.

பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் போதித்தல்

* 389 கேள்வி.—திரு. ர. ஜீவரத்தினம் (திரு. ஜே. மாதா கவுடர் சார்பாக) : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிக்கூடங்களில் நான்காம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் போதிக்க உத்தேசமுண்டா ?